**கவனிக்க.**- 20.06.2025 ஆந் திகதிய 2442 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

**கவனிக்க.**- இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2025 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்ட நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2443 - 2025 ජූනි මස 27 වැනි සිකුරාදා - 2025.06.27

2443 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 860 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 881 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, யூலை மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோறாள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


857 - B 82694- 403 (2025/05)

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/ கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி - யாழ்ப்பாணம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது வருடங்கள் 30 இற்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை வயது வருடங்கள் 70 ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா.த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.- க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும் .அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.**

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு1 " உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும் .விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் வெப் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, யூலை மாதம் 08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | கோப்பாய் | புத்தூர் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கோப்பாய் பிரிவின் விவாக (பொது) பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் |

06-158

---

## இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் ஆரம்பத் திறன் பதவித்தொகுதியின் III ஆந்தரத்தின் அஞ்சல் சாரதி (திறந்த) பதவிக்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடைமுறைப் பரீட்சை – 2025

## Practical Test for the Recruitment of Grade III Postal Drivers (Open) Posts in the Primary Level Skilled Category of the Postal Department of Sri Lanka - 2025

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் ஆரம்பத் திறன் பதவித் தொகுதியின் III ஆந் தரத்தின் 40 அஞ்சல் சாரதி பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பெற்றுள்ள இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்காக ஒரு நடைமுறைப் பரீட்சை அஞ்சல் தலைமையகத்தில் நடத்தப்படும்.

01. **மொழிமூலம் :**

நடைமுறைப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலத்தில் நடைபெறும். கோரப்பட்ட மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

02. **ஆட்களைச் சேர்ப்பதற்கான தகைமைகள் :**

2.1 **கல்வித் தகைமை :**

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு முறைக்கு மேல் இல்லாத வகையில், குறைந்த பட்சம் இரண்டு சிறப்புத் தேர்வுகளுடன் ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

2.2 **தொழிற் தகைமை :**

மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளரால் வழங்கப்பட்ட D வகுப்பின் (கனரக வாகனம்) சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல்,

2.3 **அனுபவம் :**

D வகுப்புக்கான (கனரக வாகனம்) சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றதன் பின்னர், 25.07.2025 ஆந் திகதிக்கு முன்னர் D வகுப்பின் கனரக வாகனம் ஓட்டுவது தொடர்பாகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். (நேர்முகப் பரீட்சையின்போது சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

2.4 **உடற் தகைமை :**

I. விண்ணப்பதாரியின் குறைந்தபட்ச உயரம் 05 அடி 2½ அங்குலம் (157 செ.மீ.) க்கு குறையாதிருத்தல் வேண்டும்.

II. சகல விண்ணப்பதாரிகளும் பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் இலங்கையின் எந்த ஒரு பிரதேசத்திலும் ஒரு நாளின் எந்த ஒரு நேரத்திலும் சாரதி பதவியில் கடமை மேற்கொள்வதற்கு ஏற்ற உடற்தகுதியும் மனோதிடகாத்திரமும் நல்ல கண்பார்வையுடனும் இருத்தல் வேண்டும். (தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவனத்தால் வழங்கப்பட்ட முறையான வைத்தியச் சான்றிதழ்மூலம் அதுபற்றி உறுதி செய்யப்பட வேண்டும்).

2.5 **வேறு :**

I. விண்ணப்பதாரி இலங்கை நாட்டு பிரஜையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர் சிறந்த நன்னடத்தை கொண்டவர் என்பதை கிராம அலுவலர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

III. ஆண் விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும்.

IV. பதவிக்கு இணைத்துக் கொள்வதற்கான நடைமுறைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காகத் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்வது, விண்ணப்பதாரி மேலே குறிப்பிடப்பட்ட 02 ஆம் மற்றும் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை விண்ணப்பப்படிவம் கோரும் இறுதித் திகதியான 25.07.2025 அன்று அனைத்து முறைகளிலும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமாகும்.

03. **வயதெல்லை :**

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதியான 25.07.2025 தினத்திற்கு 18 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதன்படி 25.07.2007 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன் மற்றும் 25.07.1980 ஆம் திகதிக்கு அல்லது அதற்குப் பின் பிறந்த திகதியைக் கொண்டவர்கள் மட்டுமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர். (தற்போது அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியில் இருப்பவர்களுக்கு அதிகபட்ச வயது பொருத்தமற்றதாகும்.)

04. **சம்பளத்திட்டம் :**

அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 10/2025 க்கு அமைய மாதாந்தச் சம்பளத்திட்டம் ரூ. 42,780 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூ. 66,540 ஆகும். (PL 3 -2025 இன் படி)

05. **ஆட்சேர்க்கும் முறை :**

நடைமுறைப் பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை மூலமாகும்.

நடைமுறைப் பரீட்சையின்மூலம் பெறப்படும் புள்ளிகளின் திறமை ஒழுங்கின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவார் என்பதுடன் பொது நேர்முகப் பரீட்சைக்காகப் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

5.1 **நடைமுறைப் பரீட்சை :**

இப்பரீட்சைக்காகப் பின்வரும் அளவுகோல் முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. கீழே உள்ளவாறு புள்ளிகள் பெறுதல் வேண்டும் என்பதுடன் அனைத்து பாடங்களிலும் ஒரே தடவையில் சித்தி அடைதல் வேண்டும்.

| | *பாடம்* | *அதிகபட்ச புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| I | வாகனம் ஓட்டும் திறன் | 40 | 20 |
| II | பெருந்தெருக்கள் சட்டம் சம்பந்தமாக நடைமுறை அறிவு | 40 | 20 |
| III | மோட்டார் இயந்திர தொழில்நுட்பம் சம்பந்தமான அடிப்படை அறிவு | 20 | 10 |

06. **விண்ணப்பிக்கும் முறை :**

6.I இவ்வறிவித்தலின் இறுதியில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமைய A4 அளவிலான கடதாசியில் இரு பக்கத்தையும் பயன்படுத்தி இலக்கம் 01 தொடக்கம் 05 வரையான தலைப்பு முதலாவது பக்கத்திலும் மீதி 2 ஆம் மற்றும் 3 ஆம் பக்கங்கள் முறையே உள்ளடக்கக் கூடியவாறு விண்ணப்பப்படிவம் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்கும்போது, தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரைச் சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் பயன்படுத்தப்பட வேண்டும். விண்ணப்பங்கள் அஞ்சல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.slpost.gov.lk மூலமாகவும் பெற முடியும்.

6.2 சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 25.07.2025 ஆம் திகதிக்கு முன் **சிரேஷ்ட நிர்வாகச் செயலாளர் (தலைமையகம்), இல : 310, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை கொழும்பு 10** என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்களைக் கொண்ட கடித உரையின் இடது பக்க மேல் மூலையில் **"அஞ்சல் திணைக்களத்தின் ஆரம்பத் திறன் பதவித்தொகுதியின் III ஆந்தரத்தின் அஞ்சல் சாரதி (திறந்த) பதவிக்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடைமுறைப் பரீட்சை – 2025"** எனக் குறிப்பிடப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

6.3 அரசாங்க சேவை அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள், தங்கள் விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர்மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் சான்றளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஏதாவதொரு நிறுவனத்திலிருந்து பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஒருவராலும், அவ்வாறு இல்லாத ஒரு விண்ணப்பதாரர் தனது கையொப்பத்தை அரசாங்குப் பாடசாலையின் தலைவர் / ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பொது நோட்டரி, முப்படைகளின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையின் அல்லது நிரந்தர பணியாளர் தர உத்தியோகத்தர் அல்லது ஒரு பௌத்த விகாரையின் தலைமைத் தேரர் அல்லது தலைமை மதகுரு ஒருவர் அல்லது வேறு மதத்தின் மதத் தலத்திற்குப் பொறுப்பானவர் அல்லது மதகுருமார்களில் குறிப்பிடத் தக்க பதவியை வகிக்கும் நபர் ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

6.4 நிர்ணயிக்கப்பட்ட வயது எல்லைக்கு உட்படாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள், மாதிரி விண்ணப்ப படிவத்துக்கு ஒவ்வாத விண்ணப்பங்கள், முழுமையற்ற தகவல் வழங்கப்பட்டுள்ள மற்றும் 25.07.2025 ஆம் திகதிக்குப் பிறகு பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை உள்ளடக்கிய விண்ணப்பங்கள், பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை இணைக்கப்படாத விண்ணப்பங்கள் மற்றும் தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் பெறப்பட்டதாக விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்பட மாட்டாது.

07. **கட்டணம் செலுத்துதல் :**

7.1 இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் ரூ. 500.00 பரீட்சைக் கட்டணமாகச் செலுத்த வேண்டும். அக்கட்டணமானது விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன், அஞ்சல் அதிபதி வருமானத் தலைப்பு 2001-02-00 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டிற்குள் உள்ள ஏதாவதொரு அஞ்சல் / உப அஞ்சல் அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டின் ஓரத்தை விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் கழறாத வகையில் ஒட்ட வேண்டும். பரீட்சைக்கான கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விண்ணப்பதாரியின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியைத் தம் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

08. **பெறுபேறு** :

அஞ்சல் அதிபதியின் அங்கீகாரத்துக்கு அமைய நடைமுறைப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்களின் பெறுபேறுகள் அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

09. **சேவையில் அமர்த்துவதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

9.1 இந்தப் பதவி நிரந்தரமானது. உங்களுக்கு உரித்துடைய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

9.2 தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள், ஏற்கனவே அரசாங்க சேவையில் வேறொரு பதவியில் நிரந்தரமாகப் பணியமர்த்தப்படவில்லை என்றால், அவர்கள் மூன்று ஆண்டுகள் தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு சம்பந்தப்பட்ட பதவிக்கு நியமிக்கப்படுவார்கள். அரசாங்க சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் பெறும் உத்தியோகத்தராக இருந்தால், அவரது நியமனம் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாக இருக்கும்.

9.3 பதவிக்கு இணைந்து 03 வருடத்துக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தி அடைய வேண்டுமென்பதுடன் அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 பிரகாரம் மற்றும் ஏனைய இடைநேர் விளைவான சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய மட்டத்தில் மொழித் தேர்ச்சியைப் பெறுதல் வேண்டும்.

9.4 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் இலங்கையின் எந்த ஒரு பிரதேசத்திலும் நாளின் எந்த ஒரு நேரத்திலும் சாரதி பதவியில் கடமைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இடமாற்றங்களுக்கு உட்பட்டது.

10. **தவறான தகவல்களை வழங்குதல் :**

விண்ணப்பதாரிகளினால் அனுப்பப்படும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது தவறானவையென ஆட்சேர்ப்புக்கு முன்னர் தெரியவருமிடத்து தங்களது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படும். அவ்வாறே, பொய்யான அல்லது தவறான தகவல்கள் ஆட்சேர்ப்புக்குப் பின்னர் தெரியவருமிடத்து அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்ட வகையில் பதவி நீக்கம் செய்ய அல்லது பதவி இறக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

11. சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் வாசகங்களுக்கிடையே ஏதேனும் முரண்பாடுகள் அல்லது இணக்கத்தன்மை இருப்பதாகத் தெரிய வருமாயின், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூல அறிவிப்பின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

12. இந்த அறிவிப்பில் குறிப்பிடப்படாத ஏதேனும் பிற விடயங்கள் தொடர்பாக இறுதி முடிவை எடுப்பதற்கான அதிகாரம் அஞ்சல் அதிபதிக்கே உரியது.

அஞ்சல் அதிபதி,
அஞ்சல் திணைக்களம்.

இல. 310, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2025, யூலை மாதம் 16.

மாதிரி விண்ணப்பப்படிவம்

[ ]
அலுவலக உபயோகத்திற்காக

**இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் ஆரம்பத் திறன் பதவித்தொகுதியின் III ஆந்தரத்தின் அஞ்சல் சாரதி (திறந்த) பதவிக்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நடைமுறைப் பரீட்சை – 2025.**

**Practical Test for the Recruitment of Grade III Postal Drivers (Open) Posts in the Primary Level Skilled Category of the Postal Department of Sri Lanka - 2025**

மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(பெட்டியில் தொடர்புடைய இலக்கத்தை எழுதவும்)

1. i. முதல் எழுத்துக்களுடன் பெயர்:
(சிங்களத்தில்/ தமிழில்) திரு. ……………………………………………………………………
……………………………………………………………………………………………
ஆங்கிலத்தில் (கெப்பிட்டல் எழுத்துக்களில்) Mr. ……………………………………………………
……………………………………………………………………………………………
……………………………………………………………………………………………

ii. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : திரு. ..........................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

ஆங்கிலத்தில் (கெப்பிட்டல் எழுத்துக்களில்) Mr. ............................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

2. i. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)
அழைப்புக் கடிதம் இந்த முகவரிக்கு அனுப்பப்படும்.
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

ii. சிங்களத்தில்/தமிழில் ...........................................................................................................................
..........................................................................................................................................................

3. i. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

ii. பிறந்த திகதி : ஆண்டு : | | | | | மாதம்: | | | திகதி : | | |

iii. 25.07.2025 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள் : | | |

தொலைபேசி இலக்கம்: கையடக்க | | | | | | | | | | |

(WhatsApp No.) | | | | | | | | | | |

5. நீங்கள் இலங்கை குடிமகனா ? ஆம் ☐ இல்லை ☐
(பொருத்தமான இடத்தில் X ஐ இடவும்.)

6. கல்வித் தகைமைகள் : -

6.1. க.பொ.த (சா./தர) : முதல் முறை

ஆண்டு: ....................... பரீட்சை இலக்கம் :...................................

| *விடயம்* | *பெறுபேறு* | *விடயம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

6.2. க.பொ.த (சா./தர) : இரண்டாவது முறை

ஆண்டு ....................... பரீட்சை இலக்கம் ..................................

| *விடயம்* | *பெறுபேறு* | *விடயம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

7. தொழிற் தகைமைகள் :

i. சாரதி அனுமதிப்பத்திர இலக்கம்: ……...............................
ii. வெளியிட்ட திகதி :…………………….........................................
iii. வகுப்பு D (கனரக வாகனம்) சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற திகதி :……….........................
(கனரக வாகன அனுமதிப்பத்திரத்தின் நகல் பிரதியை இணைக்கவும்)

8. உடற் தகைமை :

விண்ணப்பதாரியின் உயரம் : அடி................ அங்குலம்............. (செ.மீ. ...............)

9. வேறு தகைமைகள் :
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................

10. தாங்கள் ஏதும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் எப்போதாவது குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ?

ஆம் : ☐ இல்லை : ☐ (பொருத்தமான பெட்டியில் X குறியீட்டை இடவும்)

ஆம் எனில், தொடர்புடைய தகவல்களை வழங்கவும் :
.....................................................................................................................................................................
.....................................................................................................................................................................

11. பரீட்சை கட்டணம் செலுத்திய அஞ்சல்/ உப அஞ்சல் அலுவலகம்: ......................................................................................
பற்றுச்சீட்டு இலக்கம் :……………………….........................................................................
திகதி :…..........................................

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.

12. விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் எனவும் குறிப்பிடுகின்றேன், இந்தப் பதவிக்கு நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு இங்கு வழங்கப்பட்ட தகவல்களில் ஏதேனும் உண்மைக்குப் புறம்பானது அல்லது தவறானது என்று கண்டறியப்பட்டால், நான் தகுதியற்றவராகுவேன் என்றும் நியமனத்திற்குப் பிறகு தவறு கண்டுபிடிக்கப்பட்டால், இழப்பீடு இல்லாமல் உடனடியாக சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

மேலும், நடைமுறைப் பரீட்சையை நடத்துவது மற்றும் முடிவுகளை வெளியிடுவது தொடர்பாக அஞ்சல் அதிபதியினால் விதிக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு நான் கட்டுப்படுவேன் என்றும், இதில் வழங்கப்பட்ட எந்தத் தகவலையும் பின்னர்மாற்றமாட்டேன் என்றும் உறுதியளிக்கிறேன்.

திகதி: ........................................ ……………….........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

13. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் திரு. ............................................................................. அவர்களைத் தான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், ……................................ அன்று என் முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் நான் சான்றளிக்கின்றேன்.

திகதி: .....................................

………………………………………………….
சான்றளிப்பவரின் கையொப்பம்.

பெயர்:
பதவிப் பெயர் :
முகவரி :
பதவி முத்திரை:

14. நிறுவனத் தலைவர் / திணைக்களத் தலைவரின் சான்று (அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு)

இவ்விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திரு. …….....................……………...………............................................... அவர்கள் இந்நிறுவனத்தில் …………………….....................………………… ஆந் திகதி முதல் ……………………………………… …………………… பதவியில் பணியாற்றுகிறார் என்பதையும், இப்பரீட்சையின் முடிவுகளின் அடிப்படையில் நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவரைத் தற்போதைய பதவியிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதையும், அவர் இதுவரை எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கைக்கும் (எச்சரிக்கைகள் தவிர) உட்படுத்தப்படவில்லை என்பதையும், மேற் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மை என்றும் சான்றளிக்கின்றேன்.

திகதி: ........................................

………………………………………………………………………….
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்:
பதவிப் பெயர் :
முகவரி :
பதவி முத்திரை:

06-162

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழி மூலம் பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவாளர் பதவி - பதுளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம் /மேலதிக விவாகம் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண் /பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதி தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன், 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்களுக்கு ஆகும்.)

4. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழில் சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்: க. பொ. த. (சா.த.)** அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் /கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும் .விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, யூலை மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூன் 17.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| பதுளை | லுணுகலை | ஓயபலாத்தை கிழக்கு பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் வியலுவ பிரிவின் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |

06-200

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### சிங்கள மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – அம்பாந்தோட்டை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செயதல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் தமிழ் மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா. த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்.-** க. பொ. த. (சா./த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி.மீ. வரையிலான தூரத்தில் பிரிவிற்குள் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, யூலை மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூன் 17.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை நகரப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், அம்பாந்தோட்டை |

06-201

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

சிங்கள மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி – இரத்தினபுரி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செயதல் பதிவாளர் பதவிக்காக விண்ணபங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராக இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக ஆண்/ பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்கள மொழிக்கான சிறப்பு சித்தி உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு விடயங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்கு சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்:** க. பொ. த. (சா.த.) அல்லது அதற்கு சமமான பரீட்சையில் ஒரு விடயம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு விடயமாக கருதப்படல் வேண்டும். அந்த விடய பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அவ்விடயம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

5. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கும் இயலுமாயிருத்தல் வேண்டும்.

வைத்தியசாலையினுள் பிறப்பு, இறப்புக்களினை பதிவு செய்யும் பிறப்பு, இறப்பு பதிவாளர்களினை சேர்த்துக் கொள்ளும் பொழுது விண்ணப்பதாரர் அரசாங்க வைத்தியசாலையில் போதுமான அலுவலக வசதி கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்களில் வைத்தியசாலைக்கு 01 கி.மீ. வரையிலான தூரத்தில் பிரிவிற்குள் அமைந்துள்ள பொருத்தமான வேறு கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

6. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

7. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும்

மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, யூலை மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025, யூன் 17.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகப் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| இரத்தினபுரி | இரத்தினபுரி | இரத்தினபுரி நகரப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், இரத்தினபுரி |

06-202

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவி – திருகோணமலை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்குரிய மேலதிக முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர் உரிய முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் மதிப்பினைப் பெறும் ஆளுமையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

2. இந்தப் பதவிக்காக முஸ்லிம் ஆண்கள் மாத்திரம் விண்ணப்பிக்க இயலும்.

3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் தினம், விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதுடன் 55 வருடங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (இளைப்பாற்றப்படும் உச்ச வயதெல்லை 70 வருடங்கள் ஆகும்.)

4. முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் விவாகமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் தாரமிழந்தவர் அல்லது விவாகரத்தானவராக இருத்தல் கூடாது.

5. உரிய பிரிவில் மக்களின் மொழித் தேவைக்கிணங்க இரண்டாம் மொழியில் கடமையினை மேற்கொள்ளும் இயலுமையுடன் இரண்டுக்கு மேற்படாத தவணைகளில் சிங்களம் / தமிழ் மொழிக்காக (பதவிக்குரிய மொழி மூலம்) சிறப்பு சித்திகள் உட்பட க. பொ. த. (சா./த.) பரீட்சையில் குறைந்தது சிறப்புச் சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் (06) சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**கருத்திற் கொள்ளவும்:** க. பொ. த. (சா.த.) அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் ஒரு பாடம் இரண்டு பகுதிகளாக சித்தியடைந்திருக்கும் சந்தர்ப்பங்களில், அது ஒரு பாடமாக கருதப்படல் வேண்டும். அந்த பாடப் பகுதிகள் இரண்டும் சித்தியடைந்திருந்தால் மாத்திரமே அந்தப் பாடம் சித்தியடைந்ததாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மௌலவி சான்றிதழ் அல்லது அராபி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல், மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளினைப் பூர்த்தி செய்திருத்தலாக கருதப்படும்.

6. பிரிவில் அனைவருக்கும் அல்லது அநேகமானவர்களுக்கு இலகுவாக நெருங்கக்கூடிய பிரிவின் மத்திய இடமொன்றில் அமைந்த பதவியின் கௌரவத்தினை பாதுகாக்கும் விதத்திலான கட்டிடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு இயலுமாயிருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பம் கோரப்படும் முஸ்லிம் விவாகம் பதிவு செய்தல் பிரிவுக்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

8. இதற்குத் தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய “இணைப்பு I” உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர், (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்டப் பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும். விண்ணப்பம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் இணையத் தளத்திலும் (www.rgd.gov.lk) பெற்றுக்கொள்ள இயலும்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2025, யூலை மாதம் 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

டபிள்யூ. ஆர். ஏ. என். எஸ். விஜயசிங்க,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல.234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2025.

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலாளர் பிரிவு* | *விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி* |
|---|---|---|---|
| திருகோணமலை | கிண்ணியா | சின்ன கிண்ணியா பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |
| திருகோணமலை | குச்சவெளி | குச்சவெளி பிரிவின் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி) | மாவட்டச் செயலாளர் / மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், திருகோணமலை |

06-203

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த சட்ட அலுவலர் (தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2024

மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த சட்ட அலுவலர் (தரம் III) பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு (01) ஆட்சேர்ப்புச் செய்வதற்காக கீழ்க் காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

இவ் அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுகின்ற தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் நடாத்தப்படுகின்ற தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தபட்டு, அதன் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரி, நிலவும் வெற்றிடத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார். இதன் போது அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இல. 6 இல் குறிப்பிடப்பட்டுள்ளது) புள்ளி வழங்கல் நடைமுறைக்கு அமைய தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் அமுலுக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

02. **ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்குத் தேவையான தகைமைகள்:**

(i) **கல்வி/ தொழில்சார் தகைமைகள்:**

உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

(ii) **அனுபவம்:**

உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் சட்டத்தரணியொருவராக மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத முனைப்புடனான தொடர் தொழில்சார் அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (முனைப்புடனான தொடர் தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களில், அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட காலப்பகுதி, அத்தாட்சிப்படுத்திய திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தாட்சிப்படுத்துபவரின் உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரை பதிக்கப்பட்டிருத்தலும் வேண்டும்).

அல்லது

உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் அரச நிறுவனமொன்றில் சட்ட விடயம் சார்ந்த பதவியொன்றில் மூன்று (03) வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். (அமைச்சுச் செயலாளரினால்/ திணைக்களத் தலைவரினால்/ நிறுவனத் தலைவரினால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மூலம் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்).

**குறிப்பு:** அடிப்படைத் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் ஆவணங்களின் பிரதிகள் விண்ணப்பதாரியினாலேயே அத்தாட்சிப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பமாகும் மற்றும் முடிவடையும் திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்ட சான்றிதழ்கள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படலாம்.

- சட்ட விடயம் சார்ந்த பதவி என்பது, ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்கான அடிப்படைத் தகைமையாக சட்டமாணிப் பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் என்ற அடிப்படைத் தகைமையைக் கொண்ட பதவியொன்றாகும்.

(iii) **உடல், உள ரீதியான தகைமை:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைத் தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும், இப் பதவியில் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல், உள தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iv) **பிற தகைமைகள்:**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரிகள் சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப் படுவதற்குத் தேவையான தகைமைகளை சகல விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகளும், சேவை நிபந்தனைகளும்:**

(i) இப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமான பதவியாகும். உங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், நீங்கள் விதவைகள்/ தபுதாரர், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல் வேண்டும். காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படுகின்றவாறு நீங்கள் பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இப் பதவி மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ளவாறு இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு மூன்று (03) வருட காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iii) 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையிலும், அதனுடன் இணைந்த சுற்றறிக்கைகளிலும் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், நீங்கள் சேவையில் இணைந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக மற்றைய அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன், அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள், தகுதிகாண் காலப்பகுதியில் உரிய அரசகரும மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) இந் நியமனம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்கள் கோவைக்கும், திணைக்கள மற்றும் பிற ஒழுங்குவிதிகளுக்கும் கட்டுப்பட்டதாகும்.

(v) விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்பு மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதுடன், நீங்கள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும் மொழிமூலமே, நீங்கள் நியமனம் பெறுவதற்குத் தகுதிபெறுகின்ற மொழிமூலமாக அமையும்.

04. **வயதெல்லை:**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

05. **இப் பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்:**

2016.02.25 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் அட்டவணை இல. 1 இன் பிரகாரம் இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் வருமாறு:

ரூ. 82,150 -10 x 2,400 – 8 x 2,940 - 17 x 3,900 - ரூ.195,970 (SL1-2025)

06. தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சையின் போது கீழ்க் காணும் புள்ளி வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

<table>
<tr><th>தொடர் இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>ஆகக் கூடிய புள்ளிகள்</th></tr>
<tr><td>01.</td><td>மேலதிக கல்வித் தகைமைகள் :<br><br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்புப் பட்டம்<br><br>(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கற்றைகள் நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டப் பின் படிப்பு டிப்ளோமா<br><br>- முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம்;<br>- இரண்டாம் வகுப்பு மேல்நிலை சித்தியுடனான சட்டமாணிப் பட்டம்;<br>- வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம்;<br>- சாதாரண சித்தியுடனான சட்டமாணிப் பட்டம்;<br><br>(இ) சட்டக் கல்லூரி இறுதியாண்டு முதலாம் வகுப்பு சித்தி;<br>சட்டக் கல்லூரி இறுதியாண்டு இரண்டாம் வகுப்பு சித்தி;<br><br>குறிப்பு I : சட்டக் கல்லூரி இறுதிப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி சகிதம் சித்தியடைந்திருப்பின் மட்டும் மேற்படி 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>குறிப்பு II: ஆகக் கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப் படும்.</td><td><br><br>25<br><br>20<br><br>15<br>10<br>07<br>05<br><br>10<br>05</td><td>25</td></tr>
<tr><td>02.</td><td>மேலதிக தகைமைகள் :<br><br>வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்களைத் தயாரித்தலும், திறந்த நீதிமன்றத்தில் விடயங்களை முன்வைத்தலும்.<br><br><table>
<tr><th></th><th>வழக்குகளைக் கோப்பிடுதல் (ஒரு வழக்கிற்கு)</th><th>நீதிமன்றத்தின் முன் தோன்றி விடயங்களை முன்வைத்தல் (ஒரு வழக்கிற்கு)</th></tr>
<tr><td>உயர்நீதிமன்றம்</td><td>02</td><td>05</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>02</td><td>04</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>02</td><td>03</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>04</td><td>05</td></tr>
<tr><td>நியாயசபை</td><td>02</td><td>03</td></tr>
</table><br>குறிப்பு : மேற்படி தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட வழக்குத் தீர்ப்புகளின் பிரதிகளை அல்லது இறுதியாக வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திகதிக்குரிய வழக்கு விசாரணை அறிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை நேர்முகப் பரீட்சைச் சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
</table>

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 03. | **தகவல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பச் சட்டம் தொடர்பான அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டப் படிப்பிற்காக, தகவல் தொழில்நுட்பப் பாடத்தை அல்லது கணினியியல் பாடத்தை பிரதான பாடமாகப் பின்பற்றியிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி மூலம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிற நிறுவனமொன்றின் மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம், கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது பிற நிறுவனமொன்றின் மூலம் கணினியியல் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான NVQ 5 மட்டத்தை அல்லது அதிலும் உயர் மட்டத்தைக் கொண்ட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீ கரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் அல்லது இலங்கை சட்டக் கல்லூரி மூலம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிற தொழிற்றுறை நிறுவனமொன்றின் மூலம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சட்டத்துறையில் பாடநெறிகளைப் பின்பற்றி/ பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி சான்றிதழ்கள் பெற்றுக்கொண்டிருத்தல் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதப்படி ஆகக் கூடியது இரண்டு (02) சான்றிதழ்களுக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்).<br><br>**குறிப்பு:** ஆகக் கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப் படும். | 04 | |
| 04 | **மொழியாற்றல்** | | 15 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் ஆங்கில மொழியை பிரதான பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருத்தல். | 15 | |
| | (ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மட்டத்திலான அல்லது தேசிய மட்டத்திலான மாதிரி வழக்காடுமன்றப் போட்டிகளில் (Moot Court Competition) ஆங்கில மொழியில் காட்டியுள்ள திறன்/ ஆற்றல்.<br><br>**தனி**<br>i. முதலாமிடம்/ மிகச் சிறந்த ஆற்றல் – 12<br>ii. இரண்டாமிடம் – 10<br>iii. மூன்றாமிடம்/ பிற ஆற்றல்கள் - 08<br><br>**குழு**<br>i. முதலாமிடம்/ மிகச் சிறந்த ஆற்றல் – 10<br>ii. இரண்டாமிடம் – 08<br>iii. மூன்றாமிடம்/ பிற ஆற்றல்கள் - 06 | 12 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் ஆங்கில மொழிக்கு டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது பிற நிறுவனமொன்றின் மூலம் ஆங்கில மொழிக்கு NVQ 5 மட்டத்தை அல்லது அதிலும் உயர் மட்டத்தைக் கொண்ட டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல். | 10 | |
| | (ஈ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சையில் (உள்நாட்டு அல்லது இலண்டன்) ஆங்கில மொழிக்கு குறைந்த பட்சம் அதிதிறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது IELTS இல் மொத்தப் புள்ளிகள் 6.5 அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றிருத்தல், TOEFL-IBT இல் 79 அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றிருத்தல், TOEFL-CBT இல் 213 அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றிருத்தல், TOEFL-PBT இல் 550 அல்லது அதிலும் கூடிய புள்ளிகளைப் பெற்றிருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மூலம் ஆங்கில மொழிக்காக உயர் சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது பிற நிறுவனமொன்றின் மூலம் ஆங்கில மொழிக்காக NVQ 4 மட்டத்திலான சான்றிதழ் பெற்றிருத்தல்.<br><br>**குறிப்பு**: ஆகக் கூடிய தகைமைக்கு மட்டும் புள்ளிகள் வழங்கப்படும். | 05 | |
| 05. | **நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறன்**<br>பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குத் துணையாக அமையும் விண்ணப்பதாரியின்,<br>• பலம் (Strength Question)<br>• சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானமெடுக்கும் ஆற்றல் (Situational Questions)<br>• திறமை (Competency Question)<br>மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதை நோக்காகக் கொண்ட கேள்விகளுக்கு வழங்கப்படுகின்ற பதிலின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். | <br><br><br>02<br>03<br><br>10 | 15 |
| | **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

07. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :**

எல்லா விதத்திலும் பூர்த்தியான விண்ணப்பங்களைச் சமர்ப்பித்திருக்கும் விண்ணப்பதாரிகள் மட்டுமே தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

நேர்முகப் பரீட்சையின் போது, எல்லாச் சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகளையும், விண்ணப்பதாரியினால் முறையாக அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிழற்படப் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது, தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற பின்வரும் அடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும் :

i. ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
ii. செல்லுபடியான கடவுச்சீட்டு.

08. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

i. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை, 2025.07.27 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, ஆணையாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், B பகுதி, 03 ஆம் மாடி, கட்டம் II, "செத்சிறிபாயா", பத்தரமுல்லை. எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. இப் பதவிக்கு விண்ணப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவத்தின் மாதிரி விண்ணப்பப்படிவம் இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை, A4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பாவித்து, முதலாவது பக்கத்தில் 01 தொடக்கம் 03 வரையும், இரண்டாம் பக்கத்தில் 04 தொடக்கம் 06 வரையும், மூன்றாம் பக்கத்தில் 07 தொடக்கம் 08 வரையும் என்றவாறு தயாரித்துக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், தமது கையெழுத்தினால் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தலும் வேண்டும்.

iii. விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் சட்ட அலுவலர் - தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

iv. விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்காங்கப் பாடசாலை அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ பகிரங்க நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர் அல்லது ரூ. 47,615/- அல்லது அதிலும் கூடிய மாதாந்த திரட்டிய சம்பளத்தைப் பெறும் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோருள் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும்.

v. ஏற்கனவே அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்களத் தலைவரூடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

vi. இதன் கீழ்க் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் தொடர்பில் எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

09. **பொய்யான தகவல்களைச் சமர்ப்பித்தல் :**

நீங்கள் பூர்த்தி செய்து அனுப்பும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பிற்கு முன்னர் தெரிய வரும் பட்சத்தில் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென அல்லது பிழையானதென ஆட்சேர்ப்பின் பின்னர் தெரிய வரும் பட்சத்தில் அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கட்டுப்பட்டு தங்களை சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்பும் அல்லது நிரப்பாமல் இருக்கும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியது.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரிசுரிக்கப்பட்டுள்ள இவ் வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலமான வாசகங்களுடையில் வேறுபாடுகள் அல்லது முரண்பாடுகள் காணப்படுமிடத்து, சிங்கள மொழிமூலமான வாசகம் மேலோங்கி நிற்கும்.

12. நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் சட்ட அலுவலர் - தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2023.12.24 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை அறிவித்தலுக்கு அமைய இப்பதவிக்காக விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

13. இவ் அறிவித்தலில் குறிப்பிடப்படாத விடயமொன்று தொடர்பில் அல்லது இவ் ஆட்சேர்ப்பு தொடர்பில் ஏதேனும் சிக்கல்நிலை தோன்றும் பட்சத்தில், அது தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படுகின்ற தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

செயலாளர்,
மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சு.

2025, யூன் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியைச் சேர்ந்த சட்ட அலுவலர் (தரம் III) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் – 2024**

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

| நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் | |
|---|---|

கூட்டினுள் உரிய இலக்கத்தை எழுதவும். சிங்களம் – 2, தமிழ் – 3, ஆங்கிலம் – 4

**குறிப்பு**: விண்ணப்பிக்கும் போது குறிப்பிடப்படும் மொழிமூலத்தை பின்பு மாற்றுவதற்கு முடியாது.

1.0 1.1 முழுப் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்): திரு./ திருமதி/ செல்வி .....................................................
……………………………………………………………………………………………………………

1.2 முழுப் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): Mr./ Mrs./ Miss .........................................................
……………………………………………………………………………………………………………

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்): திரு./ திருமதி/ செல்வி ...........................
……………………………………………………………………………………………………………

1.4 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): Mr./ Mrs./ Miss ...............................
……………………………………………………………………………………………………………

2.0 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்): ………………………………………………………...
……………………………………………………………………………………………………………

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்): …………………………………………………………
……………………………………………………………………………………………………………

2.3 தொலைபேசி இல.: ………………………………..

3.0 3.1 பால்: பெண் – 0 ஆண் – 1 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 சிவில் அந்தஸ்து

திருமணமானவர் – 1 ☐ திருமணமாகாதவர் – 0 ☐

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி: ஆண்டு : ............. மாதம்: ................. திகதி: ................

3.4 2025.07.27 ஆம் திகதிக்கு வயது: வருடங்கள்: ......... மாதங்கள்: .......... நாட்கள்: ........

3.5 தேசிய ஆளடையாள அட்டை இல.: ……………………

4.0

4.1 விண்ணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தலுக்கு அமைய, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணபிப்பதற்கு பெற்றுக்கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரங்கள்:

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | திகதி |
|---|---|---|
| ................. | ........................................... | ............ |
| ................. | ........................................... | ............ |

4.2 உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்ட திகதி: ............................

4.3 விண்ணப்பங்களைக் கோருவதற்கான அறிவித்தலில் இல. 06 இன் கீழ் காட்டப்பட்ட அந்தந்த தகைமைகளை பெற்றுக்கொண்டமை தொடர்பான விபரங்கள்:

i. மேலதிக கல்வித் தகைமைகள்:

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | திகதி |
|---|---|---|
| ................. | ........................................... | ............ |
| ................. | ........................................... | ............ |

ii. மேலதிக தொழில்சார் அனுபவம்:

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | திகதி |
|---|---|---|
| ................. | ........................................... | ............ |
| ................. | ........................................... | ............ |

iii. தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அறிவு:

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | திகதி |
|---|---|---|
| ................. | ........................................... | ............ |
| ................. | ........................................... | ............ |

iv. மொழியாற்றல்:

| தகைமை | பெற்றுக்கொண்ட நிறுவனம் | திகதி |
|---|---|---|
| ................. | ........................................... | ............ |
| ................. | ........................................... | ............ |

5.0 நீங்கள் எப்போதாவது குற்றவியல் குற்றமொன்றிற்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

(உரிய கூட்டினுள் ✓ அடையாளமிடுக) ‘ஆம்’ எனில் விபரிக்கவும்.

6.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை:

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள அனைத்துத் தகவல்களும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும், விண்ணப்பப்படிவத்தில் எல்லாப் பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும் உறுதியுரைக்கின்றேன். என்னால் செய்யப்பட்ட இந்த வெளிப்படுத்தல் பொய்யானதென அல்லது பிழையானதென, நான் இப் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு முன் தெரிய வரும் பட்சத்தில் நான் இப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்குத் தகுதியற்றவனாவேன் என்பதையும், இப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின் தெரிய வரும் பட்சத்தில் பதவியிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன். அத்துடன் எல்லா சட்ட திட்டங்களுக்கும், விதிகளுக்கும் நான் கட்டுப்படுகின்றேன் என்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

......................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:................

7.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் தமது கையொப்பத்தை ....................... ஆம் திகதி எனது முன்னிலையில் இட்டார் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

..............................................................
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்துபவரின்,
முழுப் பெயர்: .............................................................
பதவி: .............................................................
முகவரி: .............................................................
திகதி: .............................................................
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையைப் பதிக்கவும்)

8.0 திணைக்களத் தலைவரின் சிபாரிசு (அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு மட்டும்):

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ............................................................ அவர்கள் இந் நிறுவனத்தில் கடமையாற்றுகின்றார் என்பதையும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானது என்பதையும், அவருடைய வருகை மற்றும் பணிகள் திருப்திகரமானது என்பதையும், அவருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் இல்லை என்பதையும், இவர் இப் பதவிக்கு தெரிவு செய்யப்படும் பட்சத்தில், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

.......................................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்

பெயர்: .............................................................
பதவி: .............................................................
முகவரி: .............................................................
திகதி: .............................................................
(உத்தியோகபூர்வ இறப்பர் முத்திரையைப் பதிக்கவும்)

06-199

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கடற்றொழில் அமைச்சு

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) கடற் பொறியியல் உதவியாளர் தரம் III (இலங்கை தொழில்நுட்ப சேவை) இற்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2024 /2025

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் கடற் பொறியியல் உதவியாளர் தரம் III பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் சேவையாற்றும் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆட்சேர்ப்பானது போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளினடிப்படையில் இடம்பெறுவதுடன் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் "Our Services" இன் கீழுள்ள "Online Applications-Recruitment Exams" ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். 2025, யூன் மாதம் 27 ஆம் திகதி மு.ப 9.00 மணியிலிருந்து நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2025, யூலை 25 ஆகும்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் கடற் பொறியியல் உதவியாளர் பதவியில் காணப்படுகின்ற 10 வெற்றிடங்களை நிரப்புவதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியமான தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற தற்போது கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் சேவையாற்றும் தகைமை பெற்ற அலுவலர்களிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அங்கீகரிக்கப்பட்ட கப்பற்றுறைகளில் உற்பத்திசெய்யப்பட்ட, உற்பத்தி செய்யப்பட்டுக் கொண்டுள்ள கடற்றொழில் படகுகள், பாரம்பரிய கடற்றொழில் படகுகள் சோதனை அறிக்கைகள், மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் கடற்றகுதி சான்றிதழ் வழங்குதல், படகுப்பதிவு மற்றும் காப்புறுதி செய்தல் தொடர்பான தொழிநுட்ப அறிக்கைகள், கடற்றகுதி சான்றிதழ் வழங்குதலும் கடற்றொழில் படகுகளின் பாகங்களிற்கான மதிப்பீட்டு அறிக்கைகள். சோதனை அறிக்கைகள் வழங்குதல் தொடர்பான தொழிநுட்ப நடவடிக்கைகள், படகு மற்றும் என்ஜின் போன்ற படகின் துணைக் கருவி வடிவமைப்பாளர்களை பதிவுசெய்வதற்கான தொழில்நுட்ப மேற்பார்வை மற்றும் பரிந்துரை, படகு மற்றும் துணைக்கருவி வடிவமைப்பாளர்களின் மூலம் வழங்கப்படக்கூடிய வடிவமைப்பு மற்றும் துணைக் கருவிகளுடன் தொடர்புடைய விடயங்களுக்காக பரிந்துரை வழங்கல், திணைக்களத்தின் வாகனங்கள் தொடர்பாக தொழில்நுட்ப மற்றும் இயந்திர தரப் பரிசோதனை அறிக்கைகளை வழங்குதலும் வாகனங்களின் பழுதுபார்த்தலின் பின்னர் மீள்பரிசோதனை செய்து கொடுப்பனவிற்கான பரிந்துரைகளை வழங்குதல் போன்ற கடமைகளை உள்ளடக்கிய பதவியொன்றாகும்.

**01. சேவை விதிமுறைகள் :**

அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கின்ற பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கடற் பொறியியல் உதவியாளர் (இலங்கை தொழில்நுட்ப சேவை) தரம் III இற்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்தானதுமாகும்.

**02. சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம் :**

சம்பளக் குறியீட்டு இலக்கம்: MN 3-2025

சம்பளஅளவுத்திட்டம் : ரூபா 31,040.00 – 10 × 445 – 11 x 660 – 10 x 730 – 10 x 750 – ரூபா 57,550.00

**03. கல்வித் தகைமைகள்:**

தூய கணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதீகவியல்/பொறியியல் தொழில்நுட்பம்/ தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுடன் மூன்று (03) பாடங்களில் க.பொ.த. (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழிகள், விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஒரு பாடத்தில் சிறப்புத் தேர்ச்சி ஒன்றுடன் ஒரே தடவையில் (06) ஆறு பாடங்களில் க.பொ.த (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

**04. தொழில் தகைமைகள் :**

I. மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற இயந்திரப் பொறியியல் /கடற் பொறியியல் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

II. தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற இயந்திரப் பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா

அல்லது

III. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற இயந்திரப் பொறியியல் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

IV. இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற இயந்திரப் பொறியியல் உயர் தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

V. இலங்கை கடற்படை கடற்கலைகள் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற கடற் பொறியியல் டிப்ளோமா

05. **அனுபவம்**: ஏற்புடையதன்று

06. **உடல் தகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் (இலங்கை நிலப்பரப்பிற்குரிய தீவுகள் அடங்கலாக) சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியைபெற்றிருத்தல் வேண்டும்.

07. **வேறு** :

i. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. சிறந்தகுணம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. பதவியில் ஆட்சேர்ப்பிற்கு அவசியமான தகைமைகளை விண்ணப்பங்கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படும் முடிவுத் திகதிக்கு முன்னர் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
iv. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 01/2020 இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாக ஒழுக்காற்றுத் தண்டனை பெறாதிருத்தல்.

08. **வயது எல்லை** :

விண்ணப்ப ஏற்புமுடிவுத் திகதிக்கு 18 வயதிற்கு குறையாது மற்றும் 30 வயதிற்குமேற்படாதிருத்தல் வேண்டும். (அதன்படி பிறந்த திகதி 2007.07.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1995.07.25 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் ஆக இருப்பின் மாத்திரமே வயது தொடர்பான தகைமைகள் பூர்த்தியாகும்)

09. **ஆட்சேர்ப்பு முறைமை:**

எழுத்துப் பரீட்சையொன்றினதும் பொதுநேர்முகத் தேர்வொன்றினதும் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடருக்கமைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோரை நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தி தகுதியானவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

(அ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரி ஒருவர் தான் கோரிய ஊடக மொழியில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும் மொழி ஊடகத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

10. **எழுத்துப் பரீட்சை:**

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்த மதிப்பெண்கள்* | *தேர்ச்சி மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவுமற்றும் உளச்சார்பு | 01மணித்தியாலம் | 100 | 40% |
| விடயம் சார் தொழில்நுட்ப பரீட்சை | 02 மணித்தியாலம் | 100 | 40% |

**பாடத்திட்டம் கீழ் காட்டப்பட்டுள்ளது.**

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவு மற்றும் உளச்சார்பு | எண்திறன், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறியும் திறன் மற்றும் பொது அறிவு ஆகிய தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்டபல் தேர்வு வினாப்பத்திரம் |
| விடயம் சார் தொழில்நுட்ப பரீட்சை | **I ஆம் பகுதி**<br>சுற்றாடல், அறிவியற் கண்டுபிடிப்புகள், விஞ்ஞான அறிவு, சர்வதேச தகவல்கள் தொடர்பான பல்தேர்வு வினாக்களை உள்ளடக்கியது<br>**II ஆம் பகுதி**<br>விடயம் சார் கட்டமைப்பு அல்லது பகுதி கட்டமைப்பு வினாக்களை உள்ளடக்கியது |

11. **பொதுநேர்முகத் தேர்வு** : ஏற்புடையது

12. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ.600.00 ஆகும். கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும்:

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

13. **விண்ணப்பிக்கும் முறை**:

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது தொகுதியினுள் உள்நுழைவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை பெற்றதன் பின்னர் அதில் செய்யப்படுகின்ற எவ்வித திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

14. **பரீட்சைக்கு பிரவேசித்தல்:**

(அ) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளதாக முடிவு செய்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் உள்ள, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ளவிண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பான அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும்.

அதில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி,பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபால் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தம்வசம் வைத்திருத்தல் அவசியமாகும். கொழும்பிற்கு அப்பாலுள்ள விண்ணப்பதாரிகள் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றுடன் மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் சரியானமுறையில் கையொப்பத்தை உறுதிப்படுத்திய தனது அனுமதி அட்டையை பரீட்சை மண்டப அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை தொடர்பாக பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரியொருவருக்கு அனுமதி அட்டையை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மீறப்படின் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டியேற்படலாம்.

15. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்:**

விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப அதிபர் திருப்தியடையக்கூடிய சுய ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக கீழ்க் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் விண்ணப்பதாரிகள் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இன்னும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரியை அடையாளங் காண முடியுமானவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

16. **கவனிக்க வேண்டியவை:**

அ. கோரப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

ஆ. தனது தனிப்பட்ட கோப்பினுள் சேர்ப்பதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. **நியமனத்திற்காக தெரிவு செய்தல்:**

எழுத்துப் பரீட்சையொன்றினதும் பொதுநேர்முகத் தேர்வொன்றினதும் முடிவுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமைத் தொடரிற்கு அமைவாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையானோரை பொது நேர்முகப் பரீட்சையொன்றிற்கு உட்படுத்தி தகுதியுடையவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

18. **பெறுபேறுகளை வெளியிடுதல்:**

தொடர்புடைய பெறுபேற்று ஆவணம் "பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்" இடம் ஒப்படைக்கப்படுவதுடன் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும்.

19. **போலியான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவரென வெளிப்படுத்தப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவருடைய விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள யாதேனுமொரு விடயம் அது பொய்யானதென்பதை அறிந்தே சமர்ப்பித்திருப்பதாக வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரச சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு இடமுண்டு. இவ்வொழுங்கு விதிகளில் கருதப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக அரச சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்

20. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலுவானதாகும்.

சுசந்த கஹவத்த,
பணிப்பாளர் நாயகம்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10,
2025.06.19.

06-188

## கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

### கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை – 2024/2025

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கனிஷ்ட வானொலி அலுவலர் தரம் III பதவிகளில் நிலவும் வெற்றிடங்களிற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக தற்போது விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆட்சேர்ப்பானது போட்டிப் பரீட்சையின் புள்ளிகளினடிப்படையில் இடம்பெறுவதுடன் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our Services” இன் கீழுள்ள “Online Applications-Recruitment Exams” ஊடாக வெளியிடப்பட்டுள்ளதுடன் நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். 2025, யூன் மாதம் 27 ஆம் திகதி மு.ப 9.00 மணியிலிருந்து நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி 2025, யூலை 25 ஆகும்.

மேலும் 2024.02.02 ஆம் திகதிய வர்த்தமானியின் கீழ் விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் செல்லுபடியாகும்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் நாடு முழுவதும் அமைந்துள்ள 15 கரையோர மாவட்டங்களில் கனிஷ்ட வானொலி அலுவலர் பதவியில் காணப்படுகின்ற 27 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியமான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கடலில் கடற்றொழிலாளர்களுக்கும் மீன்பிடிக் கலன்களிற்கும் ஏற்படுகின்ற அனர்த்தங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல், நாளாந்தம் கடற்றொழிலாளர்களுக்கான வானிலை அறிக்கையை வழங்குதல், பிரதேச கடற்றொழில் அலுவலகங்களின் செய்திப் பரிமாற்றத்திற்காக தொடர்புகொள்ளல், மீன்பிடிக்கலன்களுடன் செய்திப் பரிமாற்றம், அவர்களின் கலன் உரிமையாளர்களுக்கும் அவசியமானவர்களுக்கும் தகவல் வழங்குதல், நவீன தொழில்நுட்பத்தின் மூலம் கடற்றொழிலாளர்களுக்கு முறையாக தகவல் வழங்குவதற்கு வழங்கப்பட்டுள்ள முறைகளை பேணிக் கொண்டுசெல்லலும் 24 மணித்தியாலங்களும் கடற்றொழிலாளர்களுக்கு தகவல் வழங்குதல் போன்ற கடமைகளை உள்ளடக்கிய பதவியொன்றாகும். (இரவு நேரக் கடமை கட்டாயமாகும்.)

**01. சேவை விதிமுறைகள்:**

அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கின்ற பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு விதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கனிஷ்ட வானொலி அலுவலர் தரம் III இற்கு நியமிக்கப்படுவர். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்தானதுமாகும்.

**02. சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம்:**

சம்பளக் குறியீட்டு இலக்கம்: MT 1-2016

சம்பள அளவுத்திட்டம்: ரூ. 29,840.00 – 10 × 300 – 11 x 350 – 10 x 560 – 10 x 660 – ரூ. 48,890.00

**03. கல்வித் தகைமைகள்:**

1. சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களிற்கு சிறப்புத் தேர்ச்சி ஒன்றுடன் ஒரே தடவையில் (06) ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

2. கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்குரிய மூன்று பாடங்களில் (03) (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்த்து) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல். பழைய பாடத்திட்டத்தில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.

04. **தொழில் தகைமைகள் :**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற தொலைத் தொடர்பு அல்லது வானொலி நடவடிக்கை பற்றிய தேசிய தொழில் தகைமை (N.V.Q) ஐந்தாம் (5) மட்டத்திற்குள் உள்ளடங்குகின்ற பாடநெறி ஒன்றை வெற்றிகரமாக பூர்த்திசெய்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

05. **அனுபவம்:** ஏற்புடையதன்று

06. **உடல் தகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் (இலங்கை நிலப்பரப்பிற்குரிய தீவுகள் உட்பட) சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

07. **வேறு தகைமைகள்:**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரிகள் சிறந்தகுணம் கொண்டவர்களாயிருத்தல் வேண்டும்.
(iii) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற முடிவுத் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
(iv) தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க ஒழுக்காற்று தண்டனையொன்று பெற்றிராதிருத்தல் வேண்டும்.

08. **வயது எல்லை:**

விண்ணப்பமுடிவுத் திகதிக்கு 18 வயதுக்கு குறையாது மற்றும் 35 வயதிற்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (அதற்கமைவாக வயது தொடர்பான தகைமை பூர்த்தி செய்யப்படுவதற்கு 2007.07.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.07.25 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.)

09. **ஆட்சேர்ப்பு முறைமை:**

எழுத்துப் பரீட்சையொன்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் உயர் புள்ளிகளை பெற்றுக் கொள்கின்ற பரீட்சார்த்திகளுக்கிடையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோர் சாதாரண நேர்முகத் தேர்வு ஒன்றுக்கு அழைக்கப்பட்டு இணைத்துக் கொள்ளப்படுவர்.

(அ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும்.
(ஆ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரி ஒருவர் தான் கோரிய ஊடகமொழியில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடும் மொழி ஊடகத்தை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது.

10. **எழுத்துப் பரீட்சை:**

தரம் III இற்கு

| *பாடங்கள்* | *காலம்* | *உயர் புள்ளிகள்* | *தேர்ச்சிப் புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 2. பொதுஅறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| 3. விடயம் சார் தொழில்நுட்ப அறிவு | 01 1/4 மணித்தியாலம் | 100 | 40 |

**பாடத்திட்டம் கீழ் காட்டப்பட்டுள்ளது.**

| *வினாப்பத்திரத்தின்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவு | எண்திறன், பிரச்சினை தீர்த்தல், பகுத்தறியும் திறன் மற்றும் பொது அறிவு ஆகிய தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்ட விடயம் சார் பல்தேர்வு வினாப்பத்திரம் ஒன்றாகும். அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும். (காலம் 01 மணித்தியாலம்) |
| பொது அறிவு | இலங்கை, உலகளாவிய நிதியியல், பொருளியல், வணிக, அரசியல், சர்வதேச தொடர்புகள், முகாமைத்தும், விஞ்ஞானமும் தொழிநுட்பமும், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சுற்றாடல், சமூக கலாச்சாரம் போன்ற துறைகளின் முக்கிய நிகழ்வுகள் தொடர்பாகவும் விஷேடமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடற்றொழில் துறை தொடர்பான அடிப்படை அறிவை அளவிடுவதற்காகவும் தயாரிக்கப்படுகின்ற பல்தேர்வு வினாக்களிற்கு விடையளித்தல் வேண்டும். (காலம் 01 மணித்தியாலம்) |
| விடயம் சார் தொழில்நுட்ப பரீட்சை | 1. ரிசீவர்<br>A. M. F. M .N. M. SSB. CW சுப்பர் ஹெட்ரோடைன் (superhetrodyne) பணிகளும் கட்டுப்பாடும்<br><br>2. டிரான்ஸ்மிட்டர் (வானலை பரப்பி) — CW, AM, FM<br>ஒலிபரப்பு சமிக்ஞைகளை ஏற்றல், மோஸ் (MOS) சமிக்ஞைகளை அனுப்புதல், திறனை உருவாக்கும் படிநிலை, SWR-SWR மீட்டர் பயன்பாட்டின் முக்கியத்துவம், ஹாமோனிக் மற்றும் போலிக் கதிர்வீச்சு<br><br>3. பரிமாற்றக் கோடுகள் மற்றும் குறிப்புகள்<br>குறுக்கான மற்றும் இணையான வழித்தடைகள்<br><br>4. தீவிரம்<br>செங்குத்து, இரட்டை, தீவிர இலாபம், உயரத்தின் தாக்கம், முனைவாக்கம்<br><br>5. அலை பரவல்<br>அயனியாக்கம், அயன் கோளத்தின் அடுக்குகள், சூரியப் புள்ளிகள், MUF, LUF, OTF கட்ட எண், பாய்ச்சல் தூரம், பாய்ச்சல் வலயம், பயனுள்ள உயரம், வானலைகள், நேரடி அலைகுறைப்பு.<br><br>6. செய்திப் பரிமாற்றத்தின் அங்கங்கள்<br>சைன் அலை, அலை நேரம், அதிர்வெண், ஸ்பீக்கர், மைக்ரோபோன், அளவீடு, பல்வேறு எதிர் நடவடிக்கைகள், டெசிபெல், பற்றரி பராமரிப்புதடை, திறன்வலு மற்றும் சாய்வு<br><br>7.அளவீட்டு உபகரணம்<br>VOM வெப்பமின் இணைப்புமானி, வால்வு வோல்ற்று மானி, அழுத்தமானி, SWR மானி, RF வோல்ற்றுமானி, மெகர் (மின்காப்பளவி)<br><br>8. சுற்றுகள் மற்றும் பாகங்கள்<br>டீரான்ஸிஸ்டர் இயக்குவதற்கான அடிப்படைகள், டிரான்ஸிஸ்டர் புல விளைவு, உலோக ஒக்சைட் குறைகடத்தி டிரான்ஸிஸ்டர்கள், வால்வுள்ள AF மற்றும் RF ஒலிபரப்பு இயந்திரங்களின் எளிய சுற்றுக்களும் அடிப்படை சுற்றுக்களின் பணிகளும், ஒஸிலேட்டர் (அலையியற்றி), கலக்கி, பிழைகள், வலு விநியோக அதிர்வெண் கோப்பாக்கம் தொடர்பான அறிவு பரிசோதிக்கப்படும். (காலம் 01 ¼ மணித்தியாலம்) |

11. **பொது நேர்முகத் தேர்வு** : ஏற்புடையது

12. **பரீட்சைக் கட்டணம்** :

பரீட்சைக் கட்டணம் ரூ. 600.00 ஆகும். கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும் :

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

13. **விண்ணப்பிக்கும் முறை:**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது தொகுதியினுள் உள்நுழைவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக. விண்ணப்பப்படிவத்தின் அச்சுப்பிரதியொன்றை பெற்றதன் பின்னர் அதில் செய்யப்படுகின்ற எவ்வித திருத்தமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

14. **பரீட்சைக்கு பிரவேசித்தல்:**

(அ) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் உள்ள, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பான அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும். அதில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதிமற்றும் விண்ணப்பப் படிவத்தை தபால் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தம்வசம் வைத்திருத்தல் அவசியமாகும். கொழும்பிற்கு அப்பாலுள்ள விண்ணப்பதாரிகள் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றுடன் மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் சரியான முறையில் கையொப்பத்தை உறுதிப்படுத்திய தனது அனுமதி அட்டை பரீட்சை மண்டப அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தனது அனுமதி அட்டை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை தொடர்பாக பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரியொருவருக்கு அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்திச்செய்துள்ளதற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மீறப்படின் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டியேற்படலாம்.

15. **விண்ணப்பதாரியின் ஆளடையாளம்:**

விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப அதிபர் திருப்தியடையக்கூடிய சுய அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக கீழ்க் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் விண்ணப்பதாரிகள் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இன்னும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரியை அடையாளங் காண முடியுமானவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

16. **கவனிக்க வேண்டியவை:**

அ. கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

ஆ. தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தனது தனிப்பட்ட கோப்பினுள் சேர்ப்பதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. **நியமனத்திற்காக தெரிவு செய்தல்:**

எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளினடிப்படையில் உயர் மதிப்பெண்களை பெறுகின்ற பரீட்சார்த்திகளுக்கிடையில் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கையானோர் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்பட்டு இணைத்துக் கொள்ளப்படுவர். பொது நேர்முகத் தேர்விற்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது. பதவிகளுக்குரிய அலுவலர்களை இணைத்துக் கொள்ளும் போது தகைமைகள், சான்றிதழ்கள், ஆரோக்கிய நிலை என்பவற்றை பரீட்சிப்பதற்காக மாத்திரமே நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படுகின்றனர்.

18. **பெறுபேறுகளை வெளியிடுதல்:**

தொடர்புடைய பெறுபேற்று ஆவணம் “பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்” இடம் ஒப்படைக்கப்படுவதுடன் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும்.

19. **போலியான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவரென வெளிப்படுத்தப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவருடைய விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள யாதேனுமொரு விடயம் அது பொய்யானதென்பதை அறிந்தே சமர்ப்பித்திருப்பதாக வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு இடமுண்டு. இவ்வொழுங்கு விதிகளில் கருதப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்

20. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலுவானதாகும்.

சுசந்த கஹவத்த,
பணிப்பாளர் நாயகம்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10,
2025.06.19.

6-189

---

**கடற்றொழில் நிரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (இணை அலுவலர் சேவை வகை) கடற்றொழில் அலுவலர் தரம் III இற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை 2024/2025

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் (இணை அலுவலர் சேவை வகை) கடற்றொழில் அலுவலர் தரம் III இல் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆட்சேர்ப்பானது போட்டிப் பரீட்சையின் புள்ளிகளினடிப்படையில் இடம்பெறுவதுடன் பரீட்சையானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2025, ஒற்றோபர் மாதம் கொழும்பில் நடாத்தப்படும்.

விண்ணப்பப்படிவமானது இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk இணையத்தளத்தில் “Our Services” இன் கீழுள்ள “Online Applications-Recruitment Exams” ஊடாக வெளியிடப்படுள்ளதுடன் நிகழ்நிலை (Online) ஊடாக மாத்திரமே விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும். 2025, யூன் மாதம் 27 ஆம் திகதி மு.ப 9.00 மணியிலிருந்து நிகழ்நிலை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்ப ஏற்பு முடிவுத் திகதி 2025, யூலை மாதம் 25 ஆகும்.

இப்பதவிக்கு விண்ணப்பங்கோரி 2024.02.02 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி விண்ணப்பதாரிகளினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களும் செல்லுபடியாகும்.

நாடு முழுவதும் அமைந்துள்ள 15 கரையோர மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களிலும் 149 கடற்றொழில் பரிசோதகர் பிரிவுகளிலும் காணப்படுகின்ற 115 வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அவசியமான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பதவியின் கடமைகளில் கரையோரப் பிரதேசங்களில் களக்கடமைகள், சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல், அதனுடன் தொடர்பான இரவு நேரக்கடமைகள் போன்றன உள்ளடங்கும்.

01. **சேவை விதிமுறைகள்:**

அரசாங்க சேவை நியமனங்களை நிர்வகிக்கின்ற பொது நிபந்தனைகளுக்கும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு வதிமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் உட்பட்டு தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரிகள் கடற்றொழில் அலுவலர் தரம் III இற்கு நியமிக்கப்படுவர்.இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்தானதுமாகும்.

02. **சம்பள வகை மற்றும் அளவுத்திட்டம்:**

சம்பளக் குறியீட்டு இலக்கம்: MN 4-2016

சம்பள அளவுத்திட்டம்: ரூ. 31,490.00 – 10 × 445 – 11 x 660 – 10 x 730 – 5 x 750 – 54,250.00

03. **கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து உயிரியல், நுண்ணுயிரியல், விலங்கியல், கடல்சார் அறிவியல், கடலியல் மற்றும் சமுத்திரவியல், உணவு விஞ்ஞானம், உணவுத் தொழில்நுட்பவியல், பொருளியல், முகாமைத்துவம் அல்லது சமூக விஞ்ஞானம் போன்ற ஒரு பாடத்துறையில் பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது அப்பாடங்களில் ஒன்றை பாடநெறியின் பிரதான பாடமாகக் கொண்ட பட்டமொன்றை பெற்றிருத்தல்.

04. **தொழில் தகைமைகள் :** ஏற்புடையதன்று

05. **அனுபவம்:** ஏற்புடையதன்று

06. **உடல் தகைமைகள்:**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் (இலங்கை நிலப்பரப்பிற்குரிய தீவுகள் உட்பட) குறிப்பாக கரையோரப் பிரதேசங்களில் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகுதியை பெற்றிருத்தல் வேண்டும்.

07. **வேறு:**

I. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும்;
II. சிறந்த குணம் கொண்டவராயிருத்தல் வேண்டும் ;
III. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அவசியமான தகைமைகளை விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற முடிவுத் திகதிக்கு முன்னர் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;
IV. தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்கள் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கு இணங்க ஒழுக்காற்று தண்டனையொன்று பெற்றிராதிருத்தல் வேண்டும்.

08. **வயது எல்லை:**

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 21 வயதுக்கு குறையாது மற்றும் 35 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். (அதற்கமைவாக வயது தொடர்பான தகைமை பூர்த்தி செய்யப்படுவதற்கு 2004.07.25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1990.07.25 ஆம் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.)

09. **ஆட்சேர்ப்பு முறைமை:**

எழுத்துப் போட்டிப் பரீட்சை ஒன்றினதும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு ஒன்றினதும் பெறுபேறுகளினடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளின் மொத்த மதிப்பெண்களின் திறமைத் தொடரிற்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையில் 75% ஐ போன்ற இருமடங்கான ஆண் விண்ணப்பதாரிகளையும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையின்

25% போன்ற இருமடங்கான பெண் விண்ணப்பதாரிகளையும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தி எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு ஆகிய இரண்டினதும் இணைந்த மதிப்பெண்களின் திறமைத் தொடரிற்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற எண்ணிக்கையில் 75% ஆண் விண்ணப்பதாரிளும் 25% பெண் விண்ணப்பதாரிகளும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமைவாக பதவிக்கு இணைத்துக் கொள்ளப்படுவர்.

(அ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) ஆட்சேர்ப்பிற்கான போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரி ஒருவர் தான் கோரிய ஊடக மொழியில் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடும் மொழி ஊடகத்தை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது.

10. **எழுத்துப் பரீட்சை:**

| *வினாப்பத்திரம்* | *நேரம்* | *மொத்த மதிப்பெண்கள்* | *தேர்ச்சி மதிப்பெண்கள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |

| *வினாப்பத்திரத்தின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| நுண்ணறிவு | பரீட்சார்த்தியின் தர்க்கரீதியான வர்ணனை மற்றும் பகுப்பாய்வுத் திறன், துல்லியமான நிகழ்வுகளை கணிப்பிடும் திறன், பொது அறிவு மற்றும் நுண்ணறிவை அளவிடலை நோக்காகக் கொண்டு இது தயாரிக்கப்படும். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு மற்றும் சுருக்கமான விடையளித்தல் போன்ற 50 வினாக்களை உள்ளடக்கியதாகவிருப்பதுடன் அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும். |
| பொது அறிவு | இலங்கையிலும் உலகிலும் நிதி, பொருளாதார, வணிக, அரசியல், சர்வதேச தொடர்புகள், முகாமைத்துவம், விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கல்வி, சுகாதாரம், விளையாட்டு, சுற்றாடல், சமூகம் மற்றும் கலாச்சாரம் போனற துறைகளின் முக்கிய நிகழ்வுகள் தொடர்பாகவும் விஷேடமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடற்றொழில் துறை தொடர்பான அடிப்படை அறிவை அளவிடுவதற்காகவும் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமொன்றாகும். இவ்வினாப்பத்திரம் பல்தேர்வு மற்றும் சுருக்க விடையளித்தல் போன்ற 50 வினாக்களை உள்ளடக்கியிருப்பதுடன் அனைத்து வினாக்களிற்கும் விடையளித்தல் வேண்டும். |

11. **கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு:**

| *புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்* | *உயர் புள்ளிகள்* | *தெரிவு செய்வதற்கான குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 15 | ஏற்புடையதன்று |
| கணினி தொடர்பான அறிவு | 15 | |
| ஆங்கில மொழித்திறன் | 15 | |
| நேர்முகத் தேர்வில் காண்பிக்கின்ற திறமைகள் | 05 | |
| **மொத்தம்** | **50** | |

12. **பரீட்சைக் கட்டணம்:**

பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும். கட்டணம் செலுத்தும் போது நிகழ்நிலை அமைப்பினூடாக வழங்கப்படுகின்ற பின்வரும் கட்டணக் கொடுப்பனவு முறைகளின் மூலம் மாத்திரமே கொடுப்பனவு செய்தல் வேண்டும் :

i. ஏதேனும் வங்கிக் கடனட்டை மூலம் (Any Bank Credit Card)
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியுள்ள ஏதேனும் வங்கிப் பற்று அட்டை மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறை (Online Banking Method of Bank of Ceylon)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை ஒன்றின் மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு :

(அ) மேற்குறிப்பிட்ட முறைகளின் மூலம் கொடுப்பனவு செய்யும் விதம் பற்றிய அறிவுறுத்தல்கள் இணையத்தில் பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) கொடுப்பனவு கிடைக்கப் பெற்றதாக குறுஞ்செய்தி (SMS) மூலமாக அல்லது மின்னஞ்சல் மூலமாக அறிவிக்கப்படும். பரீட்சைக்கான மொத்தப் பணத்தையும் செலுத்த வேண்டுமென்பதுடன் பரீட்சைக் கட்டணத்தை குறைவாக அல்லது அதிகமாக செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(இ) பரீட்சைக்காக செலுத்தப்படும் பணத்தை எக்காரணத்திற்காகவும் மீளச் செலுத்தவோ வேறு பரீட்சையொன்றிற்காக மாற்றம் செய்யவோ முடியாது.

13. **விண்ணப்பிக்கும் முறை:**

நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படிவத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரியினால் நிகழ்நிலையூடாக சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவம் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது/ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது தொகுதியினுள் உள்நுழைவதற்கு பயன்படுத்தப்படுகின்ற தொலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி (SMS) ஒன்றின் மூலமோ மின்னஞ்சல் (E-mail) செய்தியாகவோ அறியத்தரப்படும். நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தற் படிவத்தை (Instructions) தரவிறக்கம் செய்து கொள்க. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்யும் போது அவ்வறிவுறுத்தல்களை ஒழுங்காக பின்பற்றுக.

14. **பரீட்சையில் தோற்றுவதற்கு தகைமை பெறல்:**

(அ) வர்த்தமானி அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளதாக முடிவு செய்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லையினுள் உள்ள, விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பான அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் அனுமதி அட்டை கிடைக்காவிடின் அது தொடர்பாக பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறியத்தருதல் வேண்டும்.

அதில் விண்ணப்பதாரியின் முழுப்பெயர், முகவரி, தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயர் என்பன குறிப்பிடப்படல் வேண்டுமென்பதுடன், விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருந்த விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபால் செய்யும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டு என்பவற்றை தம்வசம் வைத்திருத்தல் அவசியமாகும். கொழும்பிற்கு அப்பாலுள்ள விண்ணப்பதாரிகள் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கமொன்றுடன் மேற்குறிப்பிட்ட தகவல்களை உள்ளடக்கிய கடிதமொன்றை அறிவித்தலில்

குறிப்பிடப்பட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி விசாரிப்பது பயனுள்ளதாகும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் சரியான முறையில் கையொப்பத்தை உறுதிப்படுத்திய தனது அனுமதி அட்டை பரீட்சை மண்டப அதிபரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.தனது அனுமதி அட்டை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

(ஆ) விண்ணப்பதாரியொருவர் தனக்குரிய பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் உரிய பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுகின்ற முதல் நாளில் மண்டப அதிபரிடம் கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையை ஒப்படைத்தல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சை தொடர்பாக பின்பற்ற வேண்டிய விதிகளின் தொகுப்பொன்று இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

(இ) விண்ணப்பதாரியொருவருக்கு அனுமதி அட்டை வழங்குதலானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதற்கான அங்கீகாரமாக கருதப்படல் கூடாது.

(ஈ) பரீட்சையை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட விதிகள் மீறப்படின் பரீட்சைகள் ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற தண்டனையொன்றிற்கு உள்ளாதல் வேண்டியேற்படலாம்.

**15. விண்ணப்பதாரியின் ஆளடையாளம்:**

விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்காகவும் மண்டப அதிபர் திருப்தியடையக்கூடிய சுய அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். அதற்காக கீழ்க் காட்டப்படும் எந்தவொரு ஆவணமும் ஏற்றுக்கொள்ளப்படும் :

I. தேசிய ஆளடையாள அட்டை;
II. செல்லுபடியான கடவுச்சீட்டு;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

மேலும் விண்ணப்பதாரிகள் ஆளடையாளத்தை உறுதி செய்து கொள்ளக்கூடியவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் நுழைதல் வேண்டும். அவ்வாறு தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கின்ற விண்ணப்பதாரிகள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். இன்னும் பரீட்சை மண்டபத்திற்குள் நுழைந்ததிலிருந்து பரீட்சை முடிவடைந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகள் விண்ணப்பதாரியை அடையாளங் காண முடியுமானவாறு முகம் மற்றும் இரு காதுகளை மறைக்காதிருத்தல் வேண்டும்.

**16. கவனிக்க வேண்டியவை:**

அ. கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

ஆ. தற்போது அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் தனது தனிப்பட்ட கோப்பினுள் சேர்ப்பதற்காக விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும். அத்துடன் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றையும் சேவையை உறுதிப்படுத்தும் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

**17. பெறுபேறுகளை வெளியிடுதல்:**

தொடர்புடைய பெறுபேற்று ஆவணம் "பணிப்பாளர் நாயகம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்" இடம் ஒப்படைக்கப்படுவதுடன் பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் தனிப்பட்ட முறையில் பெறுபேறுகள் அறிவிக்கப்படும் அல்லது www.results.exams.gov.lk இணையத்தளத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்படும்.

18. **போலியான தகவல்களை வழங்குதல்:**

விண்ணப்பதாரியொருவர் தகைமையற்றவரென வெளிப்படுத்தப்படுமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சையின் போது அல்லது பரீட்வையின் பின்னர் அல்லது எச்சந்தர்ப்பத்திலேனும் அவருடைய விண்ணப்பத்தை இரத்துச் செய்வதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பித்துள்ள யாதேனுமொரு விடயம் அது பொய்யானதென்பதை அறிந்தே சமர்ப்பித்திருப்பதாக வெளிப்படுத்தப்படின் அல்லது ஏதேனும் முக்கியமான விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்திருப்பின் அவர் அரசாங்க சேவையிலிருந்து பணிநீக்கம் செய்யப்படுவதற்கு இடமுண்டு. இவ்வொழுங்கு விதிகளில் கருதப்பட்டிராத விடயங்கள் தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

19. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் ஒவ்வொரு மொழி வெளியீட்டிலும் ஏதேனும் ஒவ்வாமை/பொருத்தமின்மைகள் ஏற்படின் சிங்கள மொழி மூல அறிவித்தல் வலுவானதாகும்.

சுசன்த கஹவத்த,
பணிப்பாளர் நாயகம்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10,
2025.06.19.

6-190